
Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 போன் 389 | தேசிய தினசரி | மலர் 13 இதழ் 59

யாழ்ப்பாணம் பங்குனி 28 ஸபர் 14 ஞாயிற்றுக்கிழமை (11-4-71)




# எட்டு மாவட்டங்களில் இன்று முழுநாளும் ஊரடங்கு உத்தரவு

## பொதுமக்களுக்குப் பொலிசார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்குடாநாட்டின் பகுதிகளில் புதியவர்களாகக் காணப்படும் நபர்கள் சந்தேகத்திற்குரிய முறையில் நடந்து கொண்டால் அவர்கள் பற்றிய தகவல்களை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பொலிஸ் அதிகாரியிடமோ அறிவிக்குமாறு பொதுமக்களைப் பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வாகனச் சொந்தக்காரர்கள் தங்கள் வாகனங்களை இழந்திருந்தால் அல்லது பறி கொடுத்திருந்தாலோ அதுபற்றிய விபரங்களை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் அறிவிக்குமாறு வாகனச் சொந்தக்காரர்களை பொலிசார் கேட்டுள்ளனர்.

அவசரகால ஊரடங்குச் சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து வீதிகளில் அநாவசியமாகத் திரியாது பொலிசாரும் இராணுவத்தினரும் அவர்களது கடமைகளைச் செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து நிலைமை சீரடையும்வரை பொதுமக்கள் ஒத்துழைக்குமாறு வடபகுதிப் பொலிசார் கேட்டுள்ளனர்.

மக்கள் பொய்வதந்திகளை பரப்பவேண்டாமென்றும் பொய்வதந்திகளைப் பரப்புபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்டத்தில் இன்றும் மாலை 4 மணிக்கு ஊரடங்கும்

கோட்டை, ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 6 மணியுடன் ஊரடங்கு அமுல் முடிவடைகிறது இன்று பிற்பகல் 4 மணி முதல் ஊரடங்கு உத்தரவு அமுலாகும். பிற்பகல் 4 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை எவரும் வீதிகளில் நடமாடக்கூடாது.

ஆனால் அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கேகாலை, குருநாகல், மாத்தளை, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய எட்டு மாவட்டங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது.

என்றாலும் இந்த மாவட்டங்களில் வாழும்மக்களைத் தவிர்ந்த இதர இடங்களில் வாழும் எவரும் இன்று ஞாயிற்றுக்கிழமை பகலில் பிரவேசிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## காயமடைந்த பொலிஸ்காரர் ஆஸ்பத்திரியில் கொலையுண்டார்

கோட்டை, சனி

'பயங்கரவாதிகளின் செயல்களை நசுக்குவதற்கு இராணுவமும் பொலிசும் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளன. இதனால் பயங்கர நாசகாரர்களுக்கு பலத்த ஆள்சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது இராணுவமும் பொலிசும் எடுத்த நடவடிக்கைகளினால் இப்பயங்கரவாதிகளின் இயக்கம் சீர்குலையத் தொடங்கியுள்ளது' இவ்வாறு அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது!-

எல்பிட்டியாவில் பயங்கரவாதிகளினால் தாக்குதலுக்குள்ளான 3434 இலக்கத்தையுடை பொலிஸ் சார்ஜண்ட் மென்டிஸ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பயங்கர இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் மருத்துவ நிலையத்தில் வைத்தே அவரைச் சுட்டுக்கொலை செய்தார்.

பயங்கர இயக்கங்கள் இயங்குவதாகக்கருதப்பட்ட இடங்களில் ஆங்காங்கே பொலிசாரும் இராணுவமும் தாக்குதல் நடத்தி அவ்வியக்கத்தைச் சீர்குலையச் செய்துள்ளன. அம்பலாங்கொடை, கொஸ்கட, மதவாச்சி ஆகிய இடங்களில் பொலிசார் பயங்கர வாதிகள்மீது தாக்குதல் நடத்தினர்.

இப்பொழுது பயங்கர வாதிகள் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகத் தெரிகிறது. சாதாரண குடிமக்களைப் பயமுறுத்தி அவர்களிடமுள்ள துப்பாக்கிகளைப் பறித்துச் செல்வதாக ஆங்காங்கிருந்து தெரியவருகிறது.

### தொண்டர்படை திரட்டல்

நாசகாரச் சக்திகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தொண்டர் படை திரட்டப்படுகிறது. கொழும்பிலும் மற்றும் மாவட்டங்களிலும் ஊர்காவல்படை திட்டப்படுகிறது இப்படை நாசகார சக்திகளின் நடமாட்டங்களைக் கண்காணிப்புச் செய்யும் கோட்டை, மஹர, நம்புக்களை ஆகிய இடங்களில் இக்கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொண்டர் படைக்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இத்தேசிய தொண்டர் படைக்கான விண்ணப்பங்களை இராணுவத்தளபதி கோரியுள்ளார் [illegible] நேர்முகத் தெரிவு [illegible]ம்பு றேஸ்டன் கல்லூரியில் நாளை நடைபெறும் தகுதி அதிகாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை கொழும்பு றோயல் ஆரம்பபாடசாலையில் நாளை நடைபெறும்.

### விடுமுறைகளில் திறந்திருக்கும்

பொதுமக்கள் தமது பங்கீட்டுப் பொருட்களை பெறுவதற்கு வசதி செய்யும் முகமாக சகல கூட்டுறவுச் சங்கங்களும் விடுமுறை நாட்களில் திறந்திருக்க வேண்டுமென உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

நகரில் பாண் தேவை அதிகரித்திருப்பதால் அதிக அளவில் பாண் செய்யுமாறு தனியார் துறைக்கு சந்தைப்படுத்தும் திணைக்களம் ஆலோசனை கூறியுள்ளது.

மக்கள் கண்காணிப்பு குழு

## நடவடிக்கைகளில் இறங்கியது

கோட்டை, சனி

ஐயாயிரம் பேர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட மக்கள் பாதுகாப்புக்குழுக்கள் இன்று மாலையிலிருந்து நடவடிக்கையில் இறங்கியுள்ளன, கொழும்பிலும், இதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் இக்குழுக்கள், இராணுவம் பொலிஸ் ஆகிய ஆயுதப்படைகளுக்கு உதவியாக இருப்பதோடு அரசாங்க நிலையங்கள் அலுவலகங்களைப் பாதுகாத்து வரும் உணவு விநியோகம் முதலியவற்றிலும் இவர்கள் உதவி புரிவர்.

இவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதற்குத் தொடங்குவதற்கு முன் இவர்கள் முன் அரசாங்க அமைச்சர்களான பீட்டர் கெனமன். ரி. பி. சுபசிங்கா ரி பி இலங்கரத்தின ஆகியோர் உரையாற்றினர்.

## சோவியத் முயற்சி

புதுடில்லி ஏப் 10

பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு சோவியத் அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தின் முழு விபரப்படி கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் அமைதியான தீர்வு ஒன்றைக் காணும்படி முன்பிருந்தே சோவியத் அரசு வற்புறுத்தி வந்திருப்பது தெரியவந்துள்ளது

யாஹ்யாக்கான் டாக்காவுக்குப் போகுமுன்பே அமைதியான முறையில் கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் தீர்வு எடுக்கும்படி சோவியத் யூனியன் கேட்டுக்கொண்டதாம்.

## 25 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை சனி

பொதுச்சந்தையில் குடித்துவிட்டு நின்று குழப்பஞ் செய்ததாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் மு மயில்வாகனம் என்பவருக்குப் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் ரூபா 25 அபராதம்விதித்துள்ளார்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பெரும்பாலும் நாவின் சுவையின்பத்தில் அவாவுடைய மனிதனிடமே காமக் குரோதாதிகளும் குடிகொள்கின்றன. எனவே முதலில் நாவை அடக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Teiegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 28ந் திகதி (11-4-71)


## உயிர்த்த ஞாயிறு

இன்று உயிர்த்தெழுந்த ஞாயிறு. யேசுகிறிஸ்துநாதர் சிலுவையில் மரிக்கப்பட்டு, கல்லறையில் புதைக்கப்பட்ட பின் உயிர்த்தெழுந்த தினம் இது. உலகெங்குமுள்ள கத்தோலிக்கர்களும், கிறிஸ்தவர்களும் புனிதமான இத்தினத்தைப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடி மகிழ்கின்றனர். கத்தோலிக்கர், கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி உலக மக்கள் அனைவரும் கொண்டாடவேண்டிய தினம் இது.

யேசுபிரான், மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறினார்; அதன்படி வாழ்ந்து காட்டினார். நல்லதையே சொல்லி நல்லதையே செய்துகாட்டிய யேசுவுக்குக் கிடைத்தது முள் முடியும், பெரும் பாரச் சிலுவையும், கல்லறையும்தான். நல்லவை யாவற்றையும் எதிர்க்கும் தீய சக்திகள், யேசுவின் காலத்தில்தான் இருந்தன என்பதல்ல. இன்றும் தீய சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. யேசுவைச் சிலுவையில் அறைந்து மரிக்கச்செய்த அத்தீய சக்திகளால் அதிக வெற்றி பெற முடியவில்லை. ஒரு வெள்ளிக்கிழமை அவரை மரிக்கச்செய்தனர்; அவர் உயிர்த்தெழுவார் என்று தெரிந்தும் எத்தனையோ தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை யேசுபிரான் உயிர்த்தெழுந்தார்.

ஆன்மீகத்தைப் போதித்து வாழ்ந்த யேசுபிரானுக்கு மட்டுமல்ல, உண்மையையே பேசி, உண்மையையே மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமென உபதேசம்செய்த ஞானி சோக்ரட்டீஸுக்குக் கிடைத்தது நச்சுக் கோப்பை. மக்களை மக்களாக வாழ வழிசொன்ன நபிபெருமானாருக்குக் கல்லடி கிடைத்தது.

இந்த நூற்றாண்டில் ஆன்மீகத்துடன் அகிம்சையையும், மக்களின் சுதந்திரத்தையும் எடுத்துக்கூறி, சொன்னவற்றைச் செயலிலும் செய்து வாழ்ந்துகாட்டிய அண்ணல் காந்திஜிக்கு கிடைத்ததும் துப்பாக்கிக் குண்டுகள்தான்!

இந்தியாவில் காந்தி, அமெரிக்காவில் கென்னடியும், மார்டின் லூதர் கிங் இலங்கையில் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் தீயசக்திகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள்.

அவர்கள் உடலைத்தான் இத்தீயசக்திகளால் அழிக்க முடிந்ததேயன்றி அவர்களின் இலட்சியங்களையோ, உன்னத நோக்கங்களையோ, கொள்கைகளையோ அவைகளால் அழிக்கமுடியவில்லை.

யேசுகிறிஸ்துநாதரின் காலத்துக்கு முன்னரே தீயசக்திகள் தலையெடுத்து தீமைசெய்திருந்த போதிலும், அவை ஆரம்ப காலத்தில் வெற்றிபெற்றதாகத் தோன்றியபோதிலும் முடிவில் அவை தோல்வியையே கண்டிருக்கின்றனவென்பதற்கு இதிகாசங்களும் புராணங்களும் சான்று பகர்கின்றன.

தீயசக்திகள் எப்பொழுது எச்சந்தர்ப்பத்தில் தலைதூக்கினாலும் அவைமுதலில் வெற்றியீட்டுவதாகத் தோன்றினும் முடிவில் அவை தோல்வியையே அடையுமென்பதையும் நல்ல நோக்கமும் நல்ல செயலும் என்றும் வெற்றியையே ஈட்டுமென்பதையும் நிச்சயமாக நம்பலாம்.

## இன்று 'ஈஸ்டர்'

# "மரித்தவர்களாகிய நாம் உயிர்த்தெழ வேண்டும்"

— வி. இன்னாசிமுத்து —

பாவிகளுக்காக பூமியிலே பிறந்து பாடுபட்டு முடிவில் அவர்களுக்காகச் செந்நீர் சிந்தி உயிர் நீத்தார் பரமசுதன். அவரின் அன்புக்கோரெல்லையுண்டோ.

ஆதாம்-ஏவாள் கட்டிக்கொண்ட பாவத்தின் பயனை அவர்களுடைய சந்ததியினர் இழைத்த பாவத்தைக் கண்டு இறைவன் மனம் புண்பட்டது.

ஏற்கனவே ஆதாம் ஏவாளுக்கு ஆண்டவன் வாக்குரைத்தபடி சர்ப்பத்தின் தலையை நசுக்குபவளிடத்தில் பரமன் மனிதனாகப் பூவுலகத்தில் பிறக்கவேண்டியதாயிற்று.

முப்பத்துமூன்று வருடகாலமும் மக்களிடையே உலவிய அவர் தனது வல்லமையால் குருடர் பார்வையடையவும், முடவர் நடக்கவும், இறந்தோர் உயிர்த்தெழவும், குஷ்டரோகிகள் சொஸ்தமடையவும் செய்தார்.

இப்படியாக மக்களுக்கு நன்மைகள் பல செய்த யேசு, பாவவழியினின்று அவர்கள் விலகி நடக்கவழி செய்த யேசு மக்களின் நடுவே போதகர்களாக, பக்திமான்களாக நடித்துக் கொண்டிருப்பவர்களையும் விட்டுவைக்கவில்லை. "'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே' என்று அவர்களை அழைத்தார். அன்று கிறிஸ்தநாதரின் கண்ணில் வெள்ளை உடையுடன் காட்சி தந்த குருமாரின் உள்ளங்கள் எப்படிப்பட்டவையாகவிருந்தன என்பதை நாம் இதனால் அறியக்கூடியதாகவுள்ளது. 'விரியன் பாம்பின் குட்டிகளே' என்றும் அவர்களை அழைத்தார். தானே தேவன் என்றார்.

இது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. 'தேவதூஷணம் சொல்லுகிறான்.

செசார் இராயனுக்கு வரி செலுத்த வேண்டாமென்கிறான். தானே யூதருடைய இராசா என்கிறான்?- என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள்.

ஜெருசலம் நகர் கோவிலண்டையில் நின்று 'இத்தேவாலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாட்களுக்கிடையில் இதைக் 'கட்டிப் போடுவேன்' என்றார்.

இது பெரிய குற்றமாம். பிலாத்துவின் முன்பாக யேசுவை நிறுத்தி இவன் 'ஜெருசலம் தேவாலயத்தை இடித்துப்போடுங்கள். மூன்று நாளில் இதைத் திரும்பவும் கட்டிப்போடுவேன்' என்றான் என்று பரிசேயரும் குருக்களும் குற்றம் சாட்டினார்கள்.

அவர் என்ன சொன்னார். அவர் சொன்னதின் அர்த்தம் என்ன?

'நீங்கள் என்னை மரணத்துக்குட்படுத்துங்கள், நான் மூன்றும் நாள் உயிர்த்தெழுவேன்' என்பதுதான்.

இதை விளங்க முடியவில்லை அவர்களுக்கு.

குற்றவாளியாக்கினார்கள். மரண தண்டனைக் குட்படுத்தினார்கள்.

முடிவு:

ஆண்டவர் உயிர்த்தெழுந்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இது நடந்தது.

உயிருடன் உலவும் நாம் இன்று மரித்தவர்களாகவே உள்ளோம். பாவம் பல கட்டி, தீமை பல செய்து மாற்றார் உளம் நோகவைத்து வாழ்க்கை நடத்துகிறோம்.

இவற்றிலிருந்து நாம் விடுதலைபெற வேண்டும் உயிர்த்தெழ வேண்டும்.

அப்போதுதான் இன்று நாம் கொண்டாடும் உயிர்த்த ஞாயிறுதினம் நமக்குநன்மை பயப்பதாகவிருக்கும்.

கி. வங்காளம்

# இந்தியாவின் போக்கிற்கு பூட்டான் மன்னர் ஆதரவு

## பலகிராமங்கள் குண்டுவீச்சினால் அழிவு

புதுடில்லி, ஏப். 10

கிழக்குவங்காளத்திலுள்ள ராஜ்சாகி நகருக்கு 5 கிலோமீட்டர் வடக்கேயுள்ள பகுதி ஒன்றிலிருந்து பாகிஸ்தானியத் துருப்புக்களை சேக் முஜிபுர் ரஹ்மானின் ஆதரவுப்படைகள் துரத்தியடித்ததாக முஜிபுர் ஆதரவாளர்கள் தெரிவித்தனர் என இந்திய வானொலி தெரிவித்தது.

மேலும் அவ்வானொலி தெரிவித்ததாவது: ராஜ்சாகி நகரிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட பாகிஸ்தானியத் துருப்புக்கள் 500 பேர் இக்கிராமத்தில் தான் நிலைகொண்டிருந்ததாகவும் இருபகுதியினருக்கு மிடையே நடைபெற்ற சண்டையில் இருபகுதிலும் பலத்தசேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சண்டைக்கு முன்பாகப் பாக். விமானப்படை இப்பகுதி மீது கடும் தாக்குதல் நடத்தியதாகவும், இதன் பின்பு பாகிஸ்தான் கவச அணியின் ஒரு பகுதியினர் ஜினைபூர் நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகவும் இன்னோர் அணியினர் இந்திய எல்லை ஓரப்பகுதியின் சில பகுதிகளை நோக்கிச் செல்வதாகவும் தெரிவித்தது.

### கிராமங்கள் மீது குண்டுவீச்சு

ஜெய்பூர் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசி அநேக கிராம மக்களைப் படுகொலை செய்ததோடு பல கிராமங்களை நிர்மூலமாக்கியதாகவும் தெரிவித்தது. ஜெஸ்சூர், கொமில்லா பகுதிகளில் கடும் சண்டை நடைபெறுகிறதாம்.

### பாக. பத்திரிகைகள்

மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளிவரும்பத்திரிகைகளின் செய்திகளிடையேயும்தலையங்கங்களிடையேயும் பல பகுதிகள் கறுப்புமையிடப்பட்டிருப்பதாகவும், இது இராணுவ அதிகாரிகளின் கடுமையான செய்தித்தணிக்கையை காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருவதாகவும் அவ்வானொலி அறிவித்தது.

### பூட்டான் மன்னர் ஆதரவு

கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமையையிட்டு தாம் கவலையடைவதாகவும், இவ் விஷயத்தில் இந்தியாவின் போக்கைத் தாம் ஆதரிப்பதாகவும், பூட்டான் மன்னர் இன்று நிருபர்களுக்களித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது: இந்த விஷயத்தில் ஓர் அமைதித்தீர்வு ஏற்படும் எனத்தான் நம்புவதாகவும் இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பயன் படுத்தி அங்கு அமைதி ஏற்படுத்த வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கடற்படைமீது துப்பாக்கிப் பிரயோகம்

கோட்டை, சனி

மாலோவிற்குச் சென்று கொண்டிருந்த கடற்படை பிரிவொன்றின்மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்த்துக் கடற்படையினர் சுட்டதில் 6 கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர். இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடற்படையைச் சேர்ந்த இருவர் சிறுகாயத்துக்குள்ளானார்கள்.

## பாராட்டுவிழா

சுழிபுரம், சனி

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலைத் தலைமையாசிரியராக இருந்து ஓய்வுபெற்ற பிரமஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மாவின் சேவை நலம் பாராட்டுவிழாவை முன் குறிப்பிட்ட திகதியிலன்றிப் பிறிதொரு தினத்தில் நடத்துவதென விழாச்சபை தீர்மானித்துள்ளது.

## சோவியத்திற்கு அமெரிக்கக் கப்பல் விஜயம்

நியுயோர்க், ஏப் 10

அமெரிக்க கப்பலொன்று சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யவிருக்கிறது. ஒரு சர்வேக்கப்பலான இது அரசாங்க விஜயத்தை மேற்கொள்ளுகிறது. இக் கப்பலில் சிவிலியன்களே விஜயம் செய்கின்றனர். பல வருடங்களின் பின்பு அமெரிக்கக் கப்பலொன்று சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

இக் கப்பல் திங்கட்கிழமை பசுபிக்கில் உள்ள துறைமுகம் ஒன்றில் மூன்று நாட்களுக்குத் தங்கிச் செல்லும்.

# கொழும்பு - யாழ் விமான சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் இன்று விமான சேவைகள் நடைபெறவிருக்கின்றன. விமானப்பிரயாண நேரம் பற்றிச் சரியாக இப்போது சொல்லமுடியாதிருக்கிறதென ஏர்சிலோன் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வந்தபின்னர் விமான நிலையத்தில் வந்திறங்கும் பிரயாணிகள் விமான நிலையத்திலேயே தங்கியிருந்து ஊரடங்கு உத்தரவு நீங்கிய பின்னரே தமது இடங்களுக்குச் செல்லமுடியுமென்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு கொழும்பு மூலமே விமானசேவை நடைபெறும்.

## தபால் தந்தி சேவையை சீர்குலைத்தால் தண்டனை

கோட்டை, சனி

தபால் தந்தி வானொலிச் சேவையைக்குலைப்பவர்கள், குலைக்க அல்லது தடுக்க முயலும், அல்லது தலையீடுசெய்யும் நபர்கள் தண்டிக்கப்படுவார்கள். இவ்விதமான குற்றத்தைச் செய்தால் அவர்களுக்கு 5 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படலாம்.

## பஸ்—கார் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பஸ் ஒன்றும் காரும் மோதியதால் காருக்கு சேதம் மேற்பட்டது இதனால் சில மணிநேரம் போக்குவரத்து தடைபட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஜெருசலத்தில் பெரிய வெள்ளி

ஜெருசலம், ஏப். 10

நேற்று பெரியவெள்ளித் திருநாளையொட்டி ஜெரு சலம் நகரில் ஏராளமான யாத்திரீகர்கள் காணப்பட்ட னர். எதுவித அசம்பாவிதமு மின்றி பிரார்த்தனைகள் நடைபெற்றன. இந்தத்திரு நாளையொட்டி பலத்தபாது காப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

## கப்பல்கள் மோதின

லண்டன், ஏப். 10

பிரிட்டிஷ் எண்ணெய்க்கப் பல் ஒன்றுடன் டென்மார்க் கப்பல் மோதிக் கொண்ட தால் ஆங்கிலக் கால்வாயில் எண்ணெய்மிதந்துகால்வாய் அசுத்தமாகும் ஆபத்து ஏற் பட்டுள்ளதாக அஞ்சப் படு கிறது கரைக்கு வரும் எண் ணெயை அப்புறப் படுத்துவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## அறிவித்தல்

வலிகாமம் வடக்குப்பல நோக்கக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்தின் தெல்லிப்பளை மொத்த நிலையத்தில்,

1. 3000க்கு மேற்பட்ட சாக்குகளும்,
2. பழுதடைந்த மின் விசிறிகளும்,
3. மற்றும் றேடியோ வும்,
4. கழிவு சீனியும்,

வேறும்பல பொருள்களும் கேள்விப்பத்திரமூலம் விற் கப்படும்.

ரூபா 50/- சமாசத்தின் கன்னாகம் மொத்த நிலையத்தி லுள்ள அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப் பத்தி ரங்களைப் பெற்றுக்கொள்ள லாம்.

15-4-71க்குமுன் கேள் விப் பத்திரங்களைச் சமாசத் தில் ஒப்படைக்கவேண்டும்.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள
க. இராமச்சந்திரன்
நிர்வாகக் காரியதரிசி
3240

## அழைப்பு

கோட்டை, சனி

ஒய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரிகள் காவலாளர்கள் ஆகியோர் சேவைக்கு அழை க்கப்பட்டுள்ளனர். கடந்த பன்னிரண்டு மாதங்களுக் குள் ஒய்வு பெற்ற ஜெயிலர் கள், ஜெயில் கார்டுகள் மற் றும் சிறைச்சாலை மேற்பார் வையாளர்கள் ஆகியோரைச் சேவைக்கு வருமாறு அழை க்கப்பட்டுள்ளது.

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 10-30, மட்டும்
ஜெய்சங்கர் - விஜயகுமாரி
நடித்த
**குழந்தையும் தெய்வமும்**

## மனோகரா

(யாழ்ப்பாணம்)
Daily 10-30am only
Spell Binding Suspence
Thriller
BANDITS in ROME
[அவசரகாலநிலையைமுன் னிட்டு 'லக்ஷ்மிகல்யாணம்' காண்பிக்க முடியவில்லை]

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
தினசரி 9-30, மட்டும்
எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி
நடித்த
**சாரதா**

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 9-30, மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**

## ராஜா

(யாழ்ப்பாணம்)
காலை 10மணிக்கு மட்டும்
ஜெய்சங்கர் - விஜயலெட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
**உயிர் மேல் ஆசை**

## வங்காள, உருது செய்திகள்

புதுடில்லி, ஏப். 10

வங்காள மொழியிலும், உருதுமொழியிலும் தினமும் நான்கு நேரம் ஐந்து. பத்து நிமிஷங்களுக்கு விசேஷ செய்திகளை ஒலிபரப்புவதற்கு இந்திய வானொலி ஏற் பாடு செய்துள்ளது.

## விற்பனையாகின்றது

ஈழநாடு

10-வது ஆண்டு நிறைவை பொட்டி நடாத்திய சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளில் பரிசு பெற்றவை நூலுருவில் வெளிவந்துள்ளன.

**கங்குமட்டை**

(சிறுகதைத் தொகுதி)

செங்கை ஆழியன் எழுதிய — கங்குமட்டை
செம்பியன் செல்வன் எழுதிய—பூவும் கனியும்
அப்பச்சி மகாலிங்கம் எழுதிய — ஆறுதற்பரிசு
எம். ஏ. ரஹ்மான் எழுதிய —சிறுகை நீட்டி
மு கனகராசன் எழுதிய—சுண்டுவிரல் மெட்டி

தொகுதி 1: விலை ரூபா ஒன்று

**விடிய இன்னும் நேரமிருக்கு**

(ஓரங்க நாடகங்கள்)

செம்பியன் செல்வன் எழுதிய
விடிய இன்னும் நேரமிருக்கு
'யாழினி' எழுதிய தாஜ்மகால்
உடுவை தில்லைநடராசா எழுதிய — பூமணி
மு. கனகராசன் எழுதிய
சிலுவையும் குத்துவாளும்

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடங்கள்: ச கிருஷ்ணசாமி, பெரியகடை
யாழ்ப்பாணம்
ரகுநாதன் பதிப்பகம்
இல: 303, காலி வீதி, கொள்ளுப்பிட்டி
கொழும்பு—3

'ஈழநாடு'
த. பெ. எண் 49 — யாழ்ப்பாணம்

## REGAL - Jaffna

Daily- 9- 30 a.m. Only
Birth Rynolds
in
NAVAJO JOE

## ராணி

(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

## வின்ஸர்

[யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-30
மட்டும்
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
**வா ராஜா வா**

2-வது வாரம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி காலை 9-30

எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்

ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
**மூன்றெழுத்து**
(மர்மச்சித்திரம்)

## மிள்காய் செய்கையில்

குருமன் நோய், கனி உறை துளைப் புழு ஆகிய பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்தி அதிக விளைச்சலைப் பெற பாவியுங்கள்



★

பொலித்தியோன் 100%.
(பெனிற்றோதயோன்)
1 அவுன்ஸ் 6 கலன் நீரில்

★

அல்லது

பொலித்தியோன் 50%.
(பெனிற்றோதயோன்)
1 அவுன்ஸ் 2-3 கலன் நீரில்

★

அல்லது

மெற்றசிஸ்டொக்ஸ் "ஆர்"
1 அவுன்ஸ் 6 கலன் நீரில்
உடன்
பேயர் கெந்தகம் 80%.
1 அவுன்ஸ் 2 கலன் நீரில்
கலந்து தெளிக்கவும்.

★

BAYER

பொலிடோல், பரத்தயன், பேருசில் மட்டாசில், டிப்ரறெக்ஸ், குசதயன், லெபேசிட் ஆகிய கிருமி நாசினிகளும் பாவிக்கலாம்.

ஹேகெம் லிமிட்டெட், 400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10. த. பெ. 70. தொ. பே. 93563, 95331-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காடைத்தனத்துக்கு அரசு அடிபணிய மாட்டாது"

பிரதமர்

கோட்டை, சனி

**'வன்முறையால் எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகண்டுவிட முடியாது. வன்முறை மேலும் மேலும் பிரச்னைகளை அதிகரிக்கத்தான் உதவும்'**

**இவ்வாறு பிரதமர் திருமதி ஸிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு வானொலிமூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையொன்றில் தெரிவித்தார் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து தமக்கும்தமது அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்புத் தருமாறு பிரதமர் நாட்டுமக்களைக் கேட்டுக்கொண்டார். நாட்டின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாகவும் அவர் உறுதியளித்தார்,**

பிரதமர் திருமதி ஸிறிமா தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது!

ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதம மந்திரியென்றமுறையில் நாட்டின் தற்போதைய நிலை பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவது எனது கடமை யெனக்கருதுகிறேன்.

காடுகளில் இரகசியமாக இயங்கிய பயங்கர இயக்கத்தினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்பேராசையுடன் திடீர்த்தாக்குதல் நடத்தத் தொடங்கினர் பொலிஸ் நிலையங்கள் மீது குண்டுகளாலும் பயங்கர ஆயுதங்களாலும் தாக்குதல் நடத்திய இப் பயங்கரவாதிகள் ஒன்றுமறியாத விசுவாசமுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொலை செய்யத் துணிந்தனர். பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்ட சொத்துக்களையும் நாசம்செய்ய முனைந்தனர்.

பயங்கரவாதிகளை அடக்கி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டதென மக்களுக்கு உறுதியளிக்கும் நிலையிலிருக்கிறேன். இதற்கு விசுவாசமும், வீரமுமுள்ள பொலிசாருக்கும் ஆயுதப்படையினருக்கும் நாடு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. விசுவாசமும் வீரமும் நிறைந்த பொலிசாருக்கும் ஆயுதப் படையினருக்கும் நானும் எனது அரசாங்கமும் நன்றி கூறுகிறோம். அமைதியை விரும்பும் மக்கள் அனைவரும் பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

### ஜனநாயக பாரம்பரியம்

பத்து மாதங்களுக்கு முன்னர் ஜனநாயக முறையில் எனது அரசாங்கத்தைத் தெரிவுசெய்து பிரதம மந்திரி என்ற உயர்பதவியைத் தந்தீர்கள். எனக்குப்பின் வருபவர்களுக்கும் இந்த முறையிலேயே தெரிவுசெய்யப்படவேண்டும். ஜனநாயகம் பாரம்பரியத்தைக் காப்பாற்றவேண்டியது நமது கடமையாகும். இந்த மரபுகள் பல ஆண்டு காலம் பாதுகாத்துவரப்படுகின்றது இதனைக்காப்பாற்றுவது உங்கள் பொறுப்பாகும். ஆனால் வன்முறையாளர்கள் அரசாங்கத்தை வீழ்ச்சியுறச் செய்து மக்களைக் கொலைசெய்து ஆட்சியைக்கைப் பற்ற முயற்சிசெய்கிறார்கள் இதற்கான பணமும் வசதிகளும் இவர்களுக்கு கிடைத்துள்ளன. இவர்களின் கொடூரமான பரபரப்பூட்டும் நடவடிக்கைகள் முழுநாட்டையுமே அச்சுறுத்தியுள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு குண்டு வீசியும், அரசாங்கச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தும் உணவுப் பொருள் வினியோகத்தைத் தடைசெய்தும் ஏதும் அறியாத அப்பாவி பொலிஸ் அதிகாரிகளைக் கொலைசெய்தும் இவர்கள் கொடுமைகள் புரிந்துள்ளார்கள், இவர்களை இந்தக்காரியங்களைப் புரியும்படி ஊக்குவிப்பவர்களுக்கு இது உற்சாகமளிப்பதாகவிருக்கலாம்.

என்னை வீழ்த்தவிரும்பினால் அதற்கு நாகரிகமான ஜனநாயகமுறையிருக்கின்றது. ஜனநாயக முறைக்கு மாறான நடவடிக்கைகளை அடக்குவது எனது கடமையாகும். இவர்களை நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் எதிர்த்துப் போர் புரிவோம்.

### தலைவணங்க முடியாது

எந்த அரசும் பலாத்காரத்துக்கும், காட்டுமிராண்டித்தனத்துக்கும் தலைவணங்க முடியாது. சூழ்ச்சிகளுக்கு மக்களைப் பலியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற அனுமதிக்க முடியாது இந்த இளைஞர்களுக்காக நான் உண்மையாகவே பச்சாதாபப்படுகிறேன் படை வீரர்களைக் கொல்ல முயன்று பெருமளவில் பலியாகிவருகிறார்கள். இந்தக் கொலைகள் மூலம் எந்தப் பிரச்னையையும் தீர்த்துவிட முடியாது. வன்முறைகள் வன்முறைகளுக்குத்தான் வழிவகுக்கும்.

நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் இருந்து வருகின்றன. இவைகளைத் தீர்ப்



பதற்கு நாம் முயன்று வருகிறோம். மக்கள் விரும்பும் மாற்றங்களையும் ஏற்படுத்த முனைந்துவருகிறோம், ஆனால் பயங்கர இயக்கங்களைத் தூண்டுகிறவர்கள் எமக்கு அவகாசம் தருகிறார்களில்லை.

இந்தக் கிளர்ச்சியை ஒடுக்க எம்முடன் ஒத்துழைத்து எமது கடமைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்,

ஒருதாய் என்ற முறையில் நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தை நான் உணருகிறேன்,

இந்த தீயச் செயல்களை கட்டுப்படுத்த உதவுங்கள். இந்த வாலிபர்கள் எதுசரி எதுபிழையென்பதை உணரும்படி செய்யுங்கள். வன்முறை வன்முறைகளையே ஏற்படுத்தும் என்பதையும் உணரவையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்தவர்களுக்கு முக்கியமான வெள்ளிக்கிழமையான இன்று முழுநாளும்ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பது குறித்தும் கவலைப்படுகிறேன், வசதிக் குறைவுகளை பொறுத்துக் கொள்வீர்களென்றும் நம்புகிறேன்,

இச்செய்திகள் நகரபதிப்பில் வெளிவந்துள்ளது.

## இந்தியாவிடம் பாகிஸ்தான் கோரிக்கை

கோட்டை, சனி

இந்திய பிரஜைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் போவதைத்தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தான் அரசு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுப்பதாக இலங்கையிலுள்ள பாகிஸ்தானிகராலயத்தால் வெளிடப்பட்ட அறிக்கையில் கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மேயர் திரு ரி. எஸ். துரைராசா மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உறுதிப்படுத்தும் விசேஷ கூட்டம் நாளை காலை 10-30 மணிக்கு மாநகரசபை ஆணையாளர் திரு ஏ. ரி. சுந்தரம் தலைமையில் நடைபெற விருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'அரசுக்கு உதவுக'

கோட்டை, வியாழன்

'ஏழை எளிய மக்களால் ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட, தொழிலாளருக்கும் பொதுமக்களுக்கும் நன்மைசெய்யும் கொள்கைகளைக் கொண்ட இன்றைய அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பது தொழிலாள வர்க்கத்தினதும் பொதுமக்களினதும் கடமையாகும்' என்று தொழிற்சங்கங்களின் இணைப்புக்குழு விடுத்துள்ளவேண்டுகோள் ஒன்றில் கேட்டுள்ளது'

தொழிலாளர் சம்மேளனம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம், ராஜ்ய லிபிகாரு சம்மேளனம், அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்கசேவைத் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா அரசாங்க சேவைக் கூட்டுத்தொழிற்சங்க சம்மேளனம், பெற்றோலியக் கூட்டுத்

## பயங்கர ஆயுதக் காயம்

## பொலிசாருக்குத் தகவல் கொடுக்கவேண்டும்.

கோட்டை. சனி

துப்பாக்கி கைக்குண்டு மற்றும் பயங்கர ஆயுதங்களினால் காயமடைந்தவர்கள் பற்றிய தகவல்களை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வித பயங்கர ஆயுதங்களினால் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்கு வரும் பொழுது அவருக்குச் சிகிச்சை அளிக்கும் வைத்தியர், கூடிய வரையில் அது பற்றிய தகவல்களை தெளிவாகவும் விளக்கமாகவும் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும் இப்படியான பயங்கர ஆயுதங்களினால் ஏற்பட்ட காயங்களுக்குச் சிகிச்சை அளித்தவர் தகவல் அளிக்காது விட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவ்வறிவித்தல் மகா தேசாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிஷேச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## கொழும்பிலிருந்து வந்த ரயில்

யாழ்ப்பாணம். சனி

அநுராதபுரத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட புகைவண்டியொன்றுநேற்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்த வண்டியில் ஏராளமான பிரயாணிகளும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களும் வந்து சேர்ந்தனர்.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் பிரயாணிகளுக்கு கொடிகாமம் வாசிகளால் இளநீர் கொடுத்து தாக சாந்தி அளிக்கப்பட்டது.

கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து வடமராட்சி பிரயாணிகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று இரவு 10 மணியளவில் டிரக்கொன்றில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

......

## வெடிகள் கொளுத்த தடை!

**கோட்டை, சனி**

**வெடிகள், வாணங்கள் கொளுத்துவதற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது.**

**எந்த விழாவிலும் வெடிகள், வாணங்கள் கொளுத்தாமல் ஒத்துழைக்கும்படி பொதுமக்களை அரசாங்கம் ஓர் அறிக்கை மூலம் கேட்டுள்ளது.**

## 500 ரூபா பிணை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு இபோச டிப்போவைச் சேர்ந்தசாரதி ஐயாத்துரை குலசேகரம் என்பவர் முள்ளிவாய்க்கால் வாசியான வேதவனம் சுப்பிரமணியம என்பவரைக் கத்தியால் குத்திக்காயம் விளைவித்ததாகவும் பயமுறுத்தியதாகவும் அவரின் கைக்கடிகாரத்தை அபகரித்ததாகவும் முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு பதில் நீதிபதி திரு பி என், றெஜினோல்ட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி சுற்றவாளியெனக் கூறவே நீதிபதி எதிரியை ரூபா 500 பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை ஒத்தி வைத்தார்,

---

தாபன ஊழியர் சம்மேளனம், ஸ்ரீலங்கா தேசிய ஆசிரியர் சம்மேளனம்ஆகியவை கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

## வதந்தியை பரப்பினராம பலர் கைது

கோட்டை, வெள்ளி

பொய்யானதும், விஷமத்தனமானதுமான வதந்திகளைப்பரப்பினார்கள் என்ற குற்றச்சாட்டின்மீது இன்று கொழும்பு நகரில் பலர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் தொலைபேசியின் விடா முயற்சியாக வதந்தியை பரப்புவதில் ஈடுபட்டிருந்தாராம். இவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விசாரணை செய்யப் படுவர்.

## மேற்கு ஜெர்மன் ஜனாதிபதியை கொல்ல முயற்சி

பொன், ஏப். 10

மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி டாக்டர் ஹைனமனைக் கொலைசெய்ய முயற்சி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது

டாக்டர் ஹைனமன் இல்லத்தில் காணப்பட்ட ஒரு நபரை பொலிசார் பிடித்து அவர் மீது கொலை முயற்சி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த நபர் பிடிபட்டபொழுது டாக்டர் ஹைனமன் தமது இல்லத்தில் இருக்கவில்லையாம்.

## அதிகாரிகள் தகவல்களைச் சரிபார்க்கவேண்டும்

கோட்டை, சனி

உயர்தர அதிகாரிகளுக்கு கிடைக்கும் தகவல்களை சரிபார்க்குமாறு எல்லா உயர்தர அரசாங்க அதிகாரிகளையும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பணித்துள்ளது.

அதிகாரிகளுக்கு தகவல்கள் தொலைபேசி மூலம் கொடுக்கப்படும் பட்சத்தில் அத்தகவல்கள் கொடுக்கப்பட்ட இடத்திற்குரிய தொலைபேசி இலக்கம் சரிபார்க்கப்பட்ட பின்பே அச்செய்திபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென அவ்வமைச்சு அறிவித்தலில் மேலும் கேட்கப் பட்டுள்ளது.

---

சுழிபுரம், சனி

சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசு எழுதிய கந்தபுராண யுத்த காண்ட உரைநூல் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றத்தினரால் வெளியிடப்பட விருக்கிறது. இந்நூல் வைகாசி விசாக தினத்தன்று பருவாய் சிவ சுப்பிரமணிய சுவாமி தேர்த் திருவிழாவின்போது வெளியிடப்படும். ......

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org